ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருப்பதால், அதை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால், திரு. ரகுமான்கான் இதிலே கலந்து கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை தியாகராயா கல்லூரியில் மாணவர் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 16–7–80 ஆம் தேதியன்று வட சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள தியாகராயா கல்லூரியில் நடைபெற்ற மாணவர் போராட்டமும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள நிலை பற்றியும் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரி, திருவாளர்கள். உ. சுப்பிரமணியன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன் மற்றும் அ. ரகுமான் கான் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. என். எஸ். வி. சித்தன்.........

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதற்கு முன்னால் நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்கிற முறை இருக்கிறது என்று இங்கே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு நாளைக்கு எத்தனை பிரச்சினைகள் வரும் என்று நம்மால் சொல்ல முடியாது. ஆகவே, அது தளர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகராயா கல்லூரி விவகாரத்தைப் பொறுத்த வரையில் அங்கே மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. மாணவர்களே ரகளை செய்து அந்தக் கல்லூரியை மூடுகின்ற அளவிற்கு 2–3 நாளைக்கு முன்னாலே அங்கே நிலைமை உருவாகியிருக்கிறது.

அதிலே நிலைமை கட்டுக்கடங்காமல் போய் கல்வீச்சு கூட ஏற்பட்டு, கல்லூரியின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டு, கல்லூரியில் பணியாற்றுகிற அலுவலர்களுக்கும், அங்கே காவலுக்கு வந்திருந்த காவலர்களுக்கும் அதிகமான அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு, அங்கே பணியாற்றுகிற பேராசிரியர் ஒருவருக்கு ரத்தக் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். இது போன்ற நிலைமைகள் இனி உருவாகக்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 19

கூடாது, அவை தொடர் நிகழ்ச்சியாக ஆகக் கூடாது என்கிற அடிப்படையில்தான் இது தொடர்பாக விரிவாகப் பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தியாகராயா கல்லூரியில் நடக்கக்கூடிய போராட்டங்கள் போன்ற நிர்வாகத்தின் சீர்கேடுகள் காரணமாக பல்வேறு பகுதிகளில் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. ஏற்கனவே தனியார் நிறுவனங்களை அரசுடைமை ஆக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஒரு குறிப்பிட்ட மாணவர் பேரவைத் தேர்தலில் நிற்கக் கூடாது, என்று அங்கே சொல்லப்பட்ட காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை எழுந்தது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் உருவாக்கப்படுவது நிர்வாக சீர்கேடுகளால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல இடங்களில் இப்படி நடக்கின்றன. ஆகவே, அந்த நிர்வாகத்தை மிகவும் கூர்மையாகக் கவனிக்கக்கூடிய முறையில், சீர்கேடான முறையில் உள்ள நிறுவனங்களை 'டேக்-ஓவர்' செய்கிற முறையில் இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். அப்படிப்பட்ட முறையில் நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலும் இந்தப் பிரச்சனை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 54-ன் கீழ் கொடுத்திருக்கிறார்கள் ; விதி 55-ன் கீழ் அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன். எனக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நீங்கள் வாபஸ் பெற்றுவிட்டீர்களே.

திரு. அ. ரகுமான்கான் : இல்லை. குறைகளைச் சொன்னேனே. அல்லாமல் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, என்னுடைய கருத்தையும் இதிலே சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். (குறுக்கீடு).

1980 ஜூலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை அனுமதிப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்யவேண்டியது நான். அவர் தீர்மானம் கொடுத்திருப்பதால் கருத்து சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து பேரவையில் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் :—

'' வடசென்னை பழைய வண்ணாரப்பேட்டையிலுள்ள தியாகராயா கல்லூரியில் மாணவர்கள் போராட்டம் காரணமாக் பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும், தியாகராயா கல்லூரி மூடப்பட்டும் இருப்பதால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க ''.

இப்போது அந்தக் கல்லூரி திறக்கப்பட்டு சுமுகமாக நடக் கிறது. இந்தத் தீர்மானத்தை அந்தக் குறிப்பிட்ட காலத்தில் எடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை எப்போது எடுத்துக் கொள்வது என்பது என்னுடைய விவகாரம். அதைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டியதில்லை ; மேலும் அதுபற்றிச் சொல்வதாக இருந்தால் அனுமதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : இப்போது இந்த பரபரப்பான பிரச்சினை முடிந்துவிட்டது. இருந்தாலும் இதில் உண்மையான நிலைமை என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சனைபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் மற்றும் நான்காம் செமஸ்டர் பருவ சம்பளத்தை செலுத்தத் தவறிய இரு மாணவர்கள் 1980-81 ஆம் ஆண்டில் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவ்விரு மாணவர்களையும் கல்லூரியில் திரும்ப சேர்த்துக்கொள்வதைப்பற்றி பரிசீலித்ததில் அவர்கள் நடத்தை திருப்தியளிப்பதாக இல்லாமல் இருந்தமையினால் இவர் களை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்று கல்லூரி அவை (காலேஜ் கவுன்சில்) முடிவு செய்ததால் அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளவில்லை. அதன்காரண

TRUTH ALONE TRIUMPHS

மாக சில மாணவர்கள் 16-7-1980 அன்று கல்லூரியில் சுற்றி வந்து கல்லூரி உடைமைகளுக்கு கல்லெறிந்து சேதம் விளைவிக்க முற்பட்டனர். அல்லாமலும் இம்மாணவர்களின் தாக்குதலுக்கு ஆளான தத்துவ இயல் துறைத்தலைவர் திரு. கன்னையா ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் குறித்து கல்லூரி முதல்வர் 16–7–1980 அன்று காவல் துறை ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளார். இப் பகுதியில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் செய்துள்ளனர். 17–7–1980 அன்று முதல் கல்லூரி செயல் பட்டு வருகிறது. ஆகவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச் சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்கள் களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(5) கவன ஈர்ப்புகள்.

(அ) ஹையர் செகன்டரியில் 'பார்ம் மானேஜ்மென்ட்' படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள், பி.எஸ்ஸி. (அக்ரி.) சேர முடியாமல் தவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் திருவாளர்கள் செ. இராமலிங்கம், இ. எம். எம். பக்கீர் முகம்மது ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

'' தற்போது ஹையர் செகண்டரி, ஸ்மால் பார்ம் மானேஜ்மென்ட் (வொக்கேஷனல் கோர்ஸ்) தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பி.எஸ்ஸி. (அக்ரி.) பட்டப் படிப்பில் சேர முடியாத நிலையில் உள்ளனர். பி.எஸ்ஸி. (அக்ரி.) படிப்பிற்கு விவசாயப் பாடத்துடன் உயிரியல் கேட்கிறார்கள். வொக்கேஷனல் கோர்ஸ்-பயாலஜி பாடம் வைக்கப்படவில்லை. இப்பிரிவு எடுத்துத்